சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்,சென்னை-06
ந.க.எண். 6555/ஆ4/2023. நாள்.16.10.2023

| | | |
|---|---|---|
| பொருள் | | பள்ளிக்கல்வி-தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்-பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வரும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம்-(SIDP-2.0) 2023-24 ஆம் கல்வியாண்டிற்கான திட்ட விளக்க பயிற்சி 19.10.2023 அன்று ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட திட்ட அலுவலக கூட்டரங்கம், எழும்பூர், சென்னை-08, நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதால் -அனைத்து வகை மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள SIDP-2.0 வழிக்காட்டி ஆசிரியர்களை பயிற்சியில் பங்கேற்கும் பொருட்டு பணிவிடுவிப்பு செய்து அனுப்புதல் - தொடர்பாக. |
| பார்வை | | சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.049356/எம்/இ1/2023 நாள். 26.09.2023 |

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காண் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வரும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் (SIDP-2.0) 2023-24 ஆம் கல்வியாண்டிற்கான திட்ட விளக்க பயிற்சி 19.10.2023 அன்று காலை 10:00 மணி முதல் மாலை 4:30 மணி வரை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட திட்ட அலுவலக கூட்டரங்கம், எழும்பூர் சென்னை-08, நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதால் இணைப்பிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள SIDP-2.0 வழிக்காட்டி ஆசிரியர்கள் ஒரு நாள் பயிற்சியில் பங்கேற்கும் பொருட்டு பணிவிடுவிப்பு செய்து அனுப்புமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் வடக்கு மற்றும் தெற்கு, /உதவிக் கல்வி அலுவலர்கள்/ பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 18.10.2023 அன்று நடைபெற்ற பள்ளி புத்தாக்க மேம்பாட்டுப்பயிற்சியில் -(SIDP-2.0) கலந்துக்கொள்ளாத ஆசிரியர்களின் பெயர் பட்டியல் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.அவ்வாசிரியர்களும் 19.10.2023 அன்று நடைபெறும் பயிற்சியில் தவறாது கலந்துக்கொள்ள ஏதுவாக பணிவிடுவிப்பு செய்து அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு -
1.வழிகாட்டி ஆசிரியர்களின் பெயர் பட்டியல் (19.10.2023 )
2. வழிகாட்டி ஆசிரியர்களின் பெயர் பட்டியல் (18.10.2023 அன்று பயிற்சியில் கலந்துக்கொள்ளாதவர்கள் )

(குறிப்பு- பயிற்சியில் கலந்துக்கொள்ளும் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும்.

ஓம்/-
முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை

பெறுநர்
1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (வடக்கு மற்றும் தெற்கு)
2. உதவிக் கல்வி அலுவலர்கள் (சென்னை மாநகராட்சி)
3. சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்